12 .02.2021

Case No.OS.226/2008

PW.2 - பாக்கியலட்சுமி – குறுக்கு விசாரணை

சாட்சியம் அளிக்க எனக்கு சம்மன் வந்தது. கோவிந்தச்சேரிகுப்பம் சர்வே எண். 21/2, 21/5 எ ரெஜிஸ்டரில் மணியழகன் என்பவரின் பெயரில் உள்ளது. மேற்படி சர்வே எண்ணில் உள்ள மணியழகன் உயிரோடு உள்ளாரா அவரின் வாரிசுகள் யார், யார் , சொத்து அவருக்கு பாத்தியம் என்ற விவரங்கள் தெரியாது என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 21/2 ஆனது 2 எ, 2 பி என பிரிவு செய்யப்பட்டுள்ளது. 2 எ ன் மொத்த விஸ்தீரனம் 38 ½ ஏர்ஸ். சிட்டா தமிழரசி, பொற்செல்வி பெயரில் எவ்வாறு மாறியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் எவ்வளவு விஸ்தீரனம் பாத்தியம் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எப்போது அவர்களின் பெயருக்கு மாறியது என்றால் 2010 ல் மாற்றப்பட்டுள்ளது. மாற்றம் செய்ய மனு கொடுத்துள்ளார்களா என்பது என்ன உத்தரவின் பேரில் மாற்றப்பட்ட ஆவணங்கள் என்னிடம் இல்லை. அடங்கல் 21/2, 21/5 மணியழகன் பெயரில்தான் வருகிறது. இன்றைய தேதியில் பசலி 1413 கண்ணம்மாள் பெயரில் உள்ளது. அதற்குண்டான பட்டா எண்.474.உரிமையாளர் என்ற முறையில்தான் அவர் பெயர் வருகிறது என்றால் சரிதான். 2001 க்கு உண்டான அடங்கல் 21/2, 21/5 மணியழகன் பெயரில் உள்ளது. அடங்கல் 21/5 பலஉட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.